1991 செப்டம்பர் 6] [திரு. ஆ. கு. சீனிவாசன்]

இதே சமயத்தில் புரட்சித் தலைவி ஆட்சியில் ஏழையெளிய மக்களின், அடித்தளத்தில் வாழும் மக்களின் நல்வாழ்வுக்காக என்னென்ன வசதிகளைச் செய்ய வேண்டுமோ அதை எல்லாம் இந்த பட்ஜெட்டிலே நிவர்த்தி செய்திருக்கிறார்கள் என்று சொல்லிக்கொண்டு எனக்குச் சட்டமன்றத்தில் பேச வாய்ப்புத் தந்தமைக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். மிக்க நன்றி.

5. அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(ஆ) பேரவை உறுப்பினர்களுக்கு பயிற்சிக் கருத்தரங்கு நடைபெற உள்ளது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர்ளுக்கு ஒரு முக்கிய அறிவிப்பு. இன்று மாலை 5 மணிக்கு தலைமைச் செயலகத்திலுள்ள 10 மாடிக் கட்டிடத்தின் குழுக் கூட்ட மண்டபத்தில் உறுப்பினர்களுக்கான பயிற்சிக் கருத்தரங்கு நடைபெற இருக்கிறது. அதைத் தொடர்ந்து நாளை 7–9–1991 மற்றும் தொடர்ந்து திங்கள், செவ்வாய் ஆகிய தேதிகளிலும் மாலை 5 மணி முதல் அந்தப் பயிற்சிக் கருத்தரங்கு தொடர்ந்து நடைபெற இருக்கிறது. இன்று தொடங்க இருக்கும் பயிற்சிக் கருத்தரங்கை மாண்புமிகு நிதி அமைச்சர் டாக்டர் நாவலர் அவர்கள் தொடங்கி வைக்க இருக்கிறார்கள். மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்களும் ஏனைய துறையின் அதிகாரிகளும் அதில் கலந்துகொள்வார்கள். பயிற்சிக் கருத்தரங்கு பற்றிய குழு விவரம் உறுப்பினர்களுக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. பயிற்சிக் கருத்தரங்கில் உறுப்பினர்கள் தவறாது கலந்துகொள்ளக் கேட்டுக் கொள்கிறேன். அடுத்து, திரு. வெ. தமிழரசு.

திரு. வெ. தமிழரசு : மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவரவர்களே, இந்த மாமன்றத்திலே நிதிநிலை அறிக்கை மீதான விவாதத்திலே கலந்துகொண்டு, பேசுகின்ற வாய்ப் பளித்த இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்களுக்கும், ஆத்தூர் தொகுதி மக்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியை பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன். 1991–92 ஆம் ஆண்டுக் கான நிதிநிலை அறிக்கையை, அந்த அரசின் முதல் பட்ஜெட்டை அளித்த மாண்புமிகு முதலமைச்சரவர்களுக்கும், மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களுக்கும் எனது வாழ்த்துக்களைப் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன். பேரறிஞர் அண்ணா வழி வந்த நம்முடைய இதய தெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களுடைய அரசியல் வாரிசான மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் ஏழை எளிய மக்களுக்காக, தாழ்த்தப்பட்ட